REGD. No. M. 6311

PHONE No. 5565[illegible]

தனி இதழ் [illegible]
இலங்கையில் 10 சதம்
மலர் 1] [இதழ் 189

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்.. அண்ணாதுரை

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

சென்னை: தை 8உ வியாழன் (21—1—54) ★ ★ ★ வெளியூர்: தை 9உ வெள்ளி (22—1—54)

# "ஒன்றுபட்டு எதிர்ப்போம் வாரீர்!"

—(:)—

## "வட மொழி பொது மொழியானால் நாட்டின் நலன் நாசமாகும்"

### மொழிப் போருக்கு ஆயத்தமாகிறார் வையாபுரியார்

காரைக்குடி, ஜன. 18—

"வடமொழியை இந்தியாவின் பொது மொழியாக்க வேண்டுமென்ற கிளர்ச்சி கண்டிக்கத்தக்கது. அது நமது நாட்டின் நலத்திற்கும் மக்களின் அறிவு வளர்ச்சிக்கும் கேடு பயக்கும் கிளர்ச்சியாகும்."

"எனக்கு வடமொழியில் நிரம்பிய பற்றுண்டு. அம்மொழியிலுள்ள கலைச் செல்வங்களை கற்று அனுபவிக்க வேண்டுமென்ற ஆசை மிக உண்டு."

"ஆனால், அது ஆராய்ச்சித் துறைக்குரியதேயன்றி, நாட்டின் முன்னேற்றத்திற்குதவும் துறையன்று. அதன் கலைச் செல்வத்தைத் துய்க்கலாம்; ஆனால், அதிலுள்ள ஏனைய அறிவுத்துறைகள் அனைத்தும் பழமை அறிய முயலும் ஆராய்ச்சித் துறை ஒன்றிற்கே உரியவை. அறிவு வளர்ச்சியை விரும்பும் ஒவ்வொருவரும் வடமொழிக் கிளர்ச்சியைத் தடுக்க வேண்டிய அவசியம். இந்த விடயத்தில் எல்லோரும் ஒன்றுபட வேண்டும்."

"மேலை நாடுகளில் லத்தீன், கிரீக்கு முதலிய மொழிகளுக்கு எந்தப் பதவி உண்டோ அந்தப் பதவியே வடமொழிக்கும் இருக்க வேண்டும். வடமொழி, பௌத்தர், சமணர் முதல் அனைவருக்கும் பொதுவென்றும், பொதுச் சொத்திலிருந்து கடன் வாங்க அனைவருக்கும் உரிமை உண்டென்றும், வட மொழியை கட்டாயமாக பயிலத்தான் வேண்டுமென வற்புறுத்துவதும் தவறு."

"நமது அரசியலார் இந்தக் கிளர்ச்சிக்கு ஆதரவளிப்பார்களென்று தெரிகிறது. இவ்வாறு நிகழ்ந்துவிடாமல் இருக்க இறைவனைப் பிரார்த்திப்போம்."

—இவ்வாறு, தோழர் ச. வையாபுரிப்பிள்ளை அவர்கள் காரைக்குடியில் நடைபெற்ற செ. முருகப்பாவின் இராமாயண வெளியீட்டு விழாவிற்கு தலைமை தாங்கிப் பேசுகையில் குறிப்பிட்டார்.

### பெரியார் இராமசாமி உருவப்படம்

திறந்துவைக்க காமராசருக்கு அழைப்பு

வேலூர், ஜன. 20—

வேலூர் நகர சபை மண்டபத்தில் திராவிட கழகத் தலைவர் பெரியார் ராமசாமி அவர்களின் உருவப் படத்தை திறந்து வைப்பதென்றும், அதற்கு தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் கே. காமராசரை அழைப்பதென்றும் நகர சபை விசேடக் கூட்டத்தில் இன்று ஏகமனதாக முடிவு செய்யப்பட்டது.

ஓ. பி. ராமசாமி ரெட்டியாரை திருவள்ளுவர் படத்தைத் திறந்து வைக்க அழைப்பதென்றும் முடிவாயிற்று. காமராசருக்கும், ராமசாமி ரெட்டியாருக்கும் வரவேற்புப் பத்திரம் வழங்கி அளிக்கவும் முடிவாகியது.

## இலங்கை - இந்தியர் - ஒப்பந்தத்திற்கு எதிர்ப்பு

—(:)—

### நேருவுக்கு இலங்கை இந்தியர் காங்கிரஸ் தந்தி

கொழும்பு ஜன. 20—

இந்தியா - இலங்கை ஒப்பந்தத்தை இலங்கை இந்தியர் காங்கிரஸ் வன்மையாகக் கண்டித்தது.

நேரு - கொத்தலாவலை ஒப்பந்தத்தை பரிசீலனை செய்ய இலங்கை இந்தியர் காங்கிரஸ் கமிட்டி வருகிற சனிக்கிழமை யன்று கூடும், காரியக் கமிட்டியின் முடிவு தெரிந்த பின்னரே ஒப்பந்தத்தை அங்கீகரிக்க வேண்டுமென இலங்கை இந்தியர் காங்கிரஸ், நேருவுக்கு தந்தி கொடுத்திருக்கிறது.

அந்தத் தந்தியில் கூறப்பட்டிருந்ததாவது:—

"இலங்கை இந்தியர் விவகாரம் பற்றிய ஒப்பந்தம் எங்களுக்கு மிகுந்த ஏமாற்றத்தைக் கொடுத்திருக்கிறது. இந்த ஒப்பந்தத்தினால் இலங்கை இந்தியர்களுக்கு யாதொரு நன்மையும் இடையாது;

"இலங்கைப் பிரஜைகளாகப் பதிவு செய்து கொள்ளப்படும் இந்தியர்கள், தனி வாக்காளர் ஜாபிதாவில் சேர்த்துக் கொள்ளப்படும் நோக்கம் என்ன என்பது தெரியவில்லை."

"இலங்கையில் வசிப்பவர்களாகப் பதிவு செய்துகொள்ளப்படும் இந்தியர்கள், கிராமப் பஞ்சாயத்துத் தேர்தல்களில் வோட்டுப்போட அனுமதிக்கக்கூடாதென்று இலங்கை ஸ்தலஸ்தாபன மந்திரியிடம் நுவரா எலியா ஜில்லா கிராமக் கமிட்டிகளின் குழு வற்புறுத்தியது. நுவரா எலியா என்ற ஜில்லாவில் ஏராளமான தேயிலைத் தோட்டங்கள் உள்ளன. அவற்றில் இந்தியத் தொழிலாளர் ஏராளமாக வேலை செய்கிறார்கள்."

## நாத்துக்கு நிதிக்கு

### அண்ணாமலை பல்கலைக் கழக மாணவர் அன்பளிப்பு ரூ. 643-8-1

—(:)—

### மாணவர்களுக்குப் பொதுச் செயலாளர் அண்ணாதுரை பாராட்டு

அண்ணாமலைநகர், ஜன. 20—

16—1—54 சனி மாலை 5 மணி அளவில், அண்ணாமலை நகர் திராவிட மாணவ முன்னேற்றக் கழகத்தின் சார்பில், முதல் நாள் பொங்கல் விழா தோழியர் ஜி சாந்தகுமாரியின் இன்னிசையோடு அவர்கள் தோழர் பி. இராமசுவாமி வந்திருந்தோரை வரவேற்ற பின், செயலாளர் சித்தியானந்தம் அவர்கள் தலைமை வகித்தார். பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரை பொங்கல் விழாவின் சிறப்பு குறித்தும், ஆரியர் - திராவிடர் நாகரீக வேறுபாடுகள் பற்றியும் சரித்திரச் சான்றுகளுடன் விளக்கவுரை ஆற்றினார். பின் துணைச் செயலாளர் தில்லை மறைமுதல்வன் நன்றிகூற, விழா இனிது முடிவுற்றது.

17—1—54 ஞாயிறன்று மாலை 5 மணிக்கு இரண்டாம் நாள் பொங்கல் விழா அண்ணாமலை நகர் இதுவரை கண்டிராத முறையில் நடைபெற்றது.

தோழியர் சிவகாமசுந்தரி குழுவினரின் இன்னிசையுடன் விழா துவங்கியது.

தோழர் சித்தனைச் செல்வன் வரவேற்புரை நிகழ்த்தி, தோழர் சித்தியானந்தம் அவர்களைத் தலைமையேற்கும்படி கேட்டுக் கொண்டார்.

தலைவர் உரைக்குப் பின் தோழர் ஏ. கோவிந்தசாமி எம். எல் ஏ., வி வி. இராசகோபால் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

அடுத்து தோழர் கே. ஏ. மதியழகன் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் தி. மு. கழகத்தின் பாசறையாக மாறிவரும் வளர்ச்சி குறித்து விரிவுரை ஆற்றினார்.

தோழர் என். வி. நடராசன், நேரு சர்க்காரின் நேர்மையற்ற சர்வாதிகாரத்தைப்பற்றி விளக்கினார்.

பின்னர், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் தி. மு. கழகத்தின் சார்பில் கல்லக்குடி வழக்கு நிதிக்கு ரூ. 643—8—1 (முன்பு அனுப்பிய ரூ. 75—0—0 சேர்த்து) பொதுச் செயலாளர் அண்ணாதுரையிடம் பொருளாளர் சோமசுந்தரம் அவர்களால் அளிக்கப்பட்டது.

அண்ணாமலைநகர் தி மு கழகம் ரூ. 10—0—0, தொழிற்சங்கம் ரூ. 5—0—0, சிதம்பரம் மளிகை வியாபாரிகள் மூலம் 301 காலணாக்களும் பொதுச்செயலாளரிடம் கொடுக்கப்பட்டன.

மாணவர்களின் அன்புப் பரிசைப் பெற்றுக்கொண்ட பின், தோழர் அண்ணாதுரை நன்றி கூறுகையில் குறிப்பிட்டதாவது:-

"திராவிட முன்னேற்றக் கழகம் திரட்டுகின்ற படையில் வீரர் தேவை என்றால் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் அனுப்பும்; நிதியில் குறைவென்றால் பல்கலைக் கழகம் நிரப்பும்; போராட்டத்துக்கு தலைவர்கள் தேவை என்றால் தரும்,"

என்று குறிப்பிட்டுவிட்டு, மற்ற மாணவர் கழகங்களும் இதைப் பின்பற்ற வேண்டுமென்றும், நேருவின் அயல் நாட்டுக் கொள்கை குறித்தும், நீண்டநேரம் சொற்பொழிவாற்றினார்.

இறுதியாக துணைச்செயலாளர் தில்லை-மறைமுதல்வன் நன்றி கூற பொங்கல் விழா இனிது முடிவுற்றது.

### காங்கிரஸ் காரியக்கமிட்டி

ஆறு தீர்மானங்கள் நிறைவேறின

கல்யாணி, ஜன. 20—

இந்திய தேசியக் காங்கிரசின் 59-வது மகாசபை முன் வைப்பதற்கான தீர்மானங்களைத் தயாரிக்க இன்று காலை 9 மணிக்கு காரியக் கமிட்டி கூடியது.

கான் அப்துல் கபார்கான், டாக்டர் கான், காஷ்மீர், கான் அப்துல் சமாத்கான் ஆகியவர்களின் விடுதலையைப் பாராட்டியும், மாநிலங்களின் புனர் தொகுப்பு அயல் நாட்டுக் கொள்கை, காலனி ஆதிக்கம், கொரியா. ஆகியவை பற்றியும் ஆறு தீர்மானங்கள் நிறைவேறின.

### சென்னை சர்வகலாசாலையின் புது ஏற்பாடு

சென்னை, ஜன. 21—

பரீட்சை மண்டப டிக்கெட்டுகளில், அந்த டிக்கெட்டிற்குரிய மாணவரின் போட்டோவை ஒட்டும் முறையை சென்னை சர்வகலாசாலை பின்பற்றவிருக்கிறது. வருகிற மார்ச் - ஏப்ரல் மாதங்களில் மெட்ரிகுலேஷன், ஓரியண்டல் டைடில் பரீட்சைகளுக்கு மட்டும் இம்முறை பின்பற்றப்படும்.

### முயற்சி பலிக்குமா?

—::—

ரங்கூன், ஜன. 21—

பர்மாவில் பிரிட்டிஷாரிடம் சரணடையும் முன் ஜப்பானியர் ஒளித்து வைத்த பொக்கிஷத்தைத் தேடும் முயற்சி இப்போது மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஜப்பானியர் ஏதோ ஒரு குகையில் அப் பொக்கிஷத்தை ஒளித்து வைத்துவிட்டதாகவும், அதை ஒளிக்க உதவிய இரு பர்மியர்கள் கொல்லப்பட்டு விட்டதாகவும் கூறப்படுகிறது.

### மதுரை தோழர்கள் மீது ஜாமீன் வழக்கு

தோழர்கள் எஸ். முத்து, எம். அய்யாசாமி, கே. எஸ். ராசமாணிக்கம், எம் ஆர் கணேசன் உள்பட, 31 பேர் மீது தொடரப்பட்டுள்ள ஜாமீன் வழக்கு, 19—1—54ந் தேதியன்று போடப்பட்டிருந்த வாய்தாவில் சாட்சிகள் வராததால், வழக்கு 29—1—54-ந் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

### இரு முட்டாள்களை உருவாக்குவதே புதிய கல்வித் திட்டம்

திருவெண்காடு, ஜன. 20—

"இன்றைய அரசியல் நிலையில், புதிய கல்வித் திட்டம், நம் வருங்கால வாலிபர்களின் கல்விச் செல்வத்தை அழித்து, அறிவுக் கண்களைக் குத்திக் குருடாக்கும் நிலையிலுள்ளது. இரு வேளைகளிலும் பாடம் சொல்லிக் கொடுத்து, ஒரு பட்டதாரியை உற்பத்தி செய்த ஆரம்பப் பாடசாலை, இப்போது, ஒருவேளை பாடம் சொல்லிக் கொடுத்து, இரு முட்டாள்களை உற்பத்தி செய்கிறது,"

என்று, 17-1-54ல், திருவெண்காடு கீழ வீதியில் நடைபெற்ற தி மு. கழகப் பொதுக்கூட்டத்தில், தோழர் ஈ. வெ. கி. சம்பத் விளக்கவுரை ஆற்றுகையில், குறிப்பிட்டார்.

கூட்டத்திற்கு, தோழர் கே ஆர் சம்பந்தம், பி ஏ., எம். எல். ஏ., தலைமை வகித்துப் பேசுகையில், புதிய கல்வித் திட்டம் பற்றி, சென்னை சட்டசபையில் ஆச்சாரியார் கூறியவற்றிற்கு விளக்கம் தந்தார்.

# நம் நாடு

சென்னை 21—1—1954 வியாழன்


# இருதலைக் கொள்ளி!

1947 ஆகஸ்ட் 15 நள்ளிரவில் இந்தியத் துணைக்கண்டம் அரசியல் துறையில், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் இரும்புப் பிடியில் இருந்து விடுபட்டது, வரலாற்றுச் சம்பவம் என்பது உண்மையே. அதன் பலனாக, தனது எதிர்காலத்தை வளம்படுத்திக் கொள்வதற்கு இத் துணைக் கண்டத்திற்கு, அரியதோர் வாய்ப்புக் கிடைத்தது என்பதும் மறுக்கமுடியாத உண்மையேயாகும். அந்த அரிய வாய்ப்பை ஆட்சிப் பொறுப்பில் உள்ள காங்கிரஸ் கனவான்கள் எப்படிப் பயன்படுத்திக்கொண்டு வந்திருக்கிறார்கள் என்று பார்க்குங்காலை, அது ஏழை மக்களுக்குத் திருப்தியூட்டுவதாக அமைந்திருக்கவில்லை என்பதில் இரு கருத்து இருக்க நியாயமில்லை.

அடிமை இந்தியாவும், விடுதலை இந்தியாவும் ஏழையைப் பொறுத்த மட்டில் ஒரே மாதிரியாகத்தான் இருக்கிறது உண்மையைக் கூறவேண்டுமானால், அன்று, ஏழை எலும்புருவாக இருந்தான் என்றால், அவன் இன்று வெறும் எலும்புக் கூடாகக் காட்சி அளிக்கிறான் என்றுதான் அறுதியிட்டுக் கூறவேண்டியதாக இருக்கிறது. எனவே, துணைக் கண்டத்தில் உள்ள ஏழைக்கு, சுயராஜ்யம், காங்கிரஸ் ஆட்சியில் சுகராஜ்யமாக இருக்கவில்லை.

இங்குள்ள மக்களில் பெரும்பாலோர் நிலை இத்தகைய அலங்கோலத்தில்தான் இருந்து வருகிறது என்பது ஒரு பக்கம் இருக்க, வயிற்றுப் பிழைப்புக்காகக் கடல் கடந்து இலங்கை, சிங்கை, தென் ஆப்ரிக்கா போன்ற நாடுகளில் குடியேறி உள்ளவர்கள் நிலையும், இந்தியா அரசியலில் அடிமையாகக் கிடந்த காலத்தில் இருந்ததைக் காட்டிலும், இந்தியா அரசியலில் உரிமை பெற்ற பிறகும் பலமடங்கு கேடடைந்து கிடக்கிறது; கேடடைந்துகொண்டேயும் போகிறது. அதன் ஓட்டத்தைத் தடுத்து நிறுத்த காங்கிரஸ் இந்தியாவால் முடியவில்லை என்றுதான் வெட்கத்தோடும், வேதனையோடும் ஒப்புக்கொள்ள வேண்டியதாக இருக்கிறது.

எடுத்துக்காட்டாக, இலங்கைவாழ் சுமார் பத்து லட்சம் தமிழர்களின் குடி உரிமைப் பிரச்னையை எடுத்துக் கொள்ளுவோம். பிறந்த வீட்டில் அவர்கள், ஏதாவது தொழில் செய்து, மானத்தோடு பிழைக்க வழியாக காணாததால், பிழைப்புத் தேடி கடல் கடந்து இலங்கை சீமைக்குக் குடியேறினார்கள். பிறந்த வீட்டில் பிரிட்டிஷாரின் பெருந்தனம் இருந்ததால், இங்கு பிழைப்புக்கு வழி இல்லாமல், இலங்கைக்குச் செல்ல வேண்டிய கட்டாயம் அவர்களுக்கு ஏற்பட்டுவிட்டது என்பதை ஒருவராலும் மறுக்க முடியாது.

புகுந்த வீடான இலங்கையில் அவர்கள் சிலகாலம் ஏதோ ஓரளவு சுகமாகத்தான் கழித்து வந்தார்கள். பிறந்த வீட்டில் பிரிட்டிஷார் ஆதிக்கம் செலுத்தி வந்ததால், இலங்கை சென்ற தமிழர்களிடம் ஏற்கனவே அங்கிருந்த இலங்கை சிங்களவர்களுக்குக் கொஞ்சநஞ்சம் அனுதாபம் இருந்தது. ஏதோ, பஞ்சம் பிழைக்க வந்திருக்கிறார்கள் என்ற பச்சாதாபம் காட்டினர் தமிழர்களிடம். அது, கால போக்கில், தங்களுடைய எதிர்கால வாழ்க்கையைப் பாதிக்கும் சிக்கலான பிரச்னையாக சிறுகச் சிறுக மாறி வருவதைக் கண்டனர் சிங்களவர்கள்.

இந்த அச்சத்தைக் கூட்டுவிப்பது போல, இந்தியத் துணைக்கண்டத்துக்குக் கிடைத்த அரசியல் விடுதலை, இலங்கையில் குடியேறிய தமிழர்களை 'கூலி' என்ற அந்தஸ்திலிருந்து 'சுரண்டல்காரர்' என்ற புதிய, விரும்பத்தகாத அந்தஸ்துக்கு உயர்த்தி விட்டது. தமிழர்களிடத்தில் அன்று சிங்களவருக்கு இருந்துவந்த பரிதாப உணர்ச்சி மாறி, பகை உணர்ச்சி வளர்ந்துவிட்டது.

'இந்தியாவில பிரிட்டிஷ் ஆதிக்கம் இருந்தபோதுதான், அங்கு வேலை கிடைக்காது, இங்கு தமிழர்கள் குடியேறியது நியாயம்; வெள்ளையர் வெளியேறிவிட்ட பிறகு, தமிழர்களுக்கு தாய் நாடு திரும்பவேண்டியதுதானே நியாயம்,' என்று சிங்களவர்கள் கருதத் தொடங்கிவிட்டனர். எனவே, எப்படியாவது தமிழர்களை வெளியேற்றியே தீருவதென்று இலங்கை சர்க்காரும் மனமாரக் கங்கணங்கட்டி விட்டது. நிற்க,

இந்தியத் துணைக் கண்டத்தில் உள்ள காங்கிரஸ் சர்க்கார், இலங்கைவாழ் இந்தியத் தமிழர்கள் பற்றி இதுவரை, அதிக அக்கறை காட்டி வந்திருக்கிறது என்று சொல்வதற்கில்லை. ஏதோ மாற்றாந்தாய் போக்கைத் தான் இலங்கையில் குடியேறியுள்ள தமிழரின் துன்பந் துடைப்பதில் மேற்கொள்கிறது என்பது பொய்யல்ல. இலங்கையிலிருந்து அவர்கள் எழுப்பும் குரல், தொலைவில் உள்ள டில்லியின் திருச்செவிகளுள் புகுவது அவ்வளவு இலகுவானதாக இல்லை. அவர்கள் சிந்தும் கண்ணீரும் டில்லியின் கண்களில் படுவதில்லை. டில்லிக்கும், இலங்கைக்கும் இடையே உள்ள மக்கள் எழுப்பும் அழுகுரலை கேட்டுக் கேட்டு டில்லியின் காது செவிடாகப் போய்விட்டிருப்பதால், இலங்கையில் குடியேறியுள்ள தமிழர் எழுப்பும் கூக்குரலை அதனால் கேட்க முடியவில்லை!

மேலும், பிற நாட்டு எத்தர்கள் பாடும் புகழையும் கேட்டு கேட்டு ... மயங்கி கிடக்கிற பண்டிதருக்கு, இலங்கையில் இருந்து கிளம்பும் தமிழ்ப் பெருங்குடி மக்களின் அழுகுரலைக் கேட்கவே விருப்பமூட்டுவதாக இல்லை. நிற்க,

இலங்கையில் குடியேறிய தமிழர்களுக்குப் பிறந்த வீட்டு ஆதரவும் அவசியமான நேரத்தில், தேவையான அளவு கிடைப்பதில்லை. புகுந்த இடத்து சர்க்கார் கொடுக்கும் தொல்லையும் தினம் வளர்ந்துகொண்டே போகிறது. அங்குள்ள தமிழர்கள் இரு நாட்டுக்கும் வேண்டாத விருந்தாளிகளாக இன்று உள்ளனர்.

இலங்கையைப் பொறுத்தவரையில் உள்ள நாட்டுத் தமிழர்களுக்கும், சிங்களவர்களுக்குமிடையே மொழியை அடிப்படையாகக் கொண்டு மனப்பிளவு ஏற்கனவே இருந்து வருவதை அனைவரும் அறிவர். தமிழ் நாட்டில் இருந்து அங்குச் சென்று, குடியேறியுள்ளோர் தொகை கிட்டத்தட்ட பத்து லட்சம் என்று கணக்கிடப்பட்டு இருக்கிறது. அவர்களில் நிரந்தரக் குடிகளாக உள்ளவர் தொகை, எட்டு லட்சத்திற்குக் குறையாதாம். மொழியின் காரணமாக, நிலையாக அங்குள்ள தமிழ் நாட்டுத் தமிழர்கள், இலங்கைத் தமிழர்களோடு மொழிவழியில் ஒன்றுபடுவார்களானால், அந்தக் கூட்டுத் தொகை சிங்களவர் தொகையை மிஞ்சிவிடக் கூடியதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

இதைக் கருதும்பொழுது, இலங்கை ஆட்சியில் தங்கள் ஆதிக்கம் இருக்க முடியாதே என்று இலங்கை சிங்களவர்களுக்கு அச்சம் பிறக்கிறது. இத்தகு சூழ்நிலை என்றும் ஏற்படாமல் இருப்பதற்காகவே, நிரந்தரக் குடிகளாக இலங்கையில் உள்ள இந்தியத் தமிழர்களுக்குக் குடி உரிமை அளிக்க இலங்கையில் உள்ள சிங்கள சர்க்கார் மறுக்கிறது. எனவே, எந்தப் பொய்க் காரணத்தையாவது இட்டுக் கட்டி கூறிக்கொண்டு, இந்தியத் தமிழர்களை இலங்கையிலிருந்து அறவே வெளியேற்றிவிட அந்த சர்க்கார் தீவிரம் காட்டி வருகிறது.

அங்குக் குடியேறியுள்ள தமிழர்கள் கூடுதலாக உள்ள பகுதியில், அவர்களுக்கெனத் தனித் தேர்தல் முறை இருக்குமென்றும், பிரதிநிதிகள் எண்ணிக்கையை இரு பிரதமர்களும் கலந்துகொண்டு நிர்ணயிப்பது என்னும் ஒப்பந்தத்தில் ஒரு பிரிவு கூறுகிறது. இலங்கைத் தமிழர்களையும், அங்குள்ள இந்தியத் தமிழர்களையும் ஒன்றுசேர விடக்கூடாது என்பதற்காகத்தான், இந்தத் தனித் தொகுதியை ஒப்பந்தத்தில் கொத்தலாவலை சேர்த்திருக்கிறார் என்பதைத் தவிர இதற்கு வேறு தகுந்த நியாயமெதுவும் இருக்க முடியாது.

தனித் தொகுதி முறையை 'திண்டிறுல் இருந்தில கண்டம்' என்று, மனத்திறந்து திண்டு மறுத்துவந்த பண்டிதர், இப்பொழுது திண்டினைக் கொண்டு மறுக்காமல், கைச்சாத்தும் எவ்வாறு இட்டாரோ தெரியவில்லை. 'தமிழர்கள் தானே, எப்படியாவது தொலைந்து போகட்டும்,' என்று பண்டிதர் கொண்டுவிட்டதின் அலட்சியப் போக்குத்தான் இதற்குக் காரணம் போலும்!

மேலே எடுத்துக் காட்டியுள்ள ஒன்றே போதும், இலங்கை ஆட்சிப் பொறுப்பு, என்றும் சிங்களவர் கையிலேயே இருக்க வேண்டுமென்பதுதான் கொத்தலாவலையின் உள்ளக்கிடக்கை என்பதை எண்பிக்க!

அதோடு, இலங்கையில் வாழும் இந்தியத் தமிழர்கள் நலன்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணம் கொத்தலாவலைக்குத் துளியும் கருத்தில் கிடையாதென்பதும், கூடுமானவரை அவர்களில் பெருந் தொகையினரை இலங்கையை விட்டு வெளியேற்றிவிட வேண்டும் என்றே அவர் சதி செய்கிறார் என்பதும், மேற்குறித்தத் தனித் தொகுதி முறையிலிருந்து வெட்டவெளிச்சமாகிறது.

இலங்கைவாழ் இந்தியத் தமிழர்களின் பிரச்னையில் முடிவு காண இந்தியப் பிரதமரை டில்லியில் சந்தித்த இலங்கை சர்க்கார் பிரதமர் சர் ஜோன் கொத்தலாவலை அவர்களை பத்திரிகை நிருபர் கேட்டபொழுது, "முதல் முதலாக 2000 ஆண்டுகளுக்கு முன்பாக விஜயா என்ற மன்னன், இலங்கைத் தீவில் கால் வைத்ததிலிருந்து பழம் பெரும் பிரச்னையாக இது இருந்து வருகிறது" என்று அவர் கூறி இருக்கிறார். இந்தக் கூற்றுக்கு என்ன பொருள்?

சுமார் கால்நூற்றாண்டாகத் தோன்றியுள்ளதும், சென்ற ஆறு ஏழு ஆண்டுகளாக நெருக்கடி அடைந்துள்ளதுமான குறிப்பிட்ட இலங்கையில் குடியேறிய தமிழர்களின் பிரச்னையைக்குறித்துக் கேட்டால், இப்பிரச்னைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்பாக ஏற்பட்ட சோழனின் படையெடுப்பைச் சுட்டிக் காட்ட வேண்டிய அவசியம் இலங்கைப் பிரதமர் கொத்தலாவலைக்கு ஏன் உண்டாக வேண்டும்?

இந்த மனோபாவம் கொண்டுள்ள ஒருவரிடமிருந்து இலங்கை வாழ் இந்தியத் தமிழர்களுக்குச் சரியான நியாயம் கிடைக்குமென்று, எதிர்பார்ப்பது அவ்வளவு பேதைமையாகும்? இவர் வார்த்தையில், எப்படி நம்பிக்கை ஏற்பட்டதோ இந்தியப் பிரதமர் பண்டிதருக்கு என்பது மூடு மந்திரமாகவே இருக்கிறது. இருநாட்டுப் பிரதமர்களும் செய்துகொண்டுள்ள ஒப்பந்தத்திலும், இலங்கையில் உள்ள இந்தியத் தமிழர்களில் பெரும்பாலோருக்கு. இலங்கை குடியுரிமை, கட்டாயம் கிடைக்கும் என்று நம்பிக்கைத் தருமளவில ஒரு பிரிவும் திட்டவட்டமாக இல்லை.

ஆனால், கூடிய விரைவில் இலங்கையில் குடியேறியுள்ள லட்சக்கணக்கான தமிழர்களை இந்தியக் குடிகளாகப் பதிவு செய்துகொள்ள இலங்கை சர்க்கார் தூண்டுதல் அளித்து, சில நாள் சென்ற பின்னர், அவர்கள் அனைவரையும் சட்டப்படி வலுக்கட்டாயமாக இலங்கையை விட்டு வெளியேறச் செய்ய ஆக்கம் தரும் பிரிவு ஒன்று, ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்தத்தில் விளக்கமாக இருக்கிறது.

இலங்கையில குடியேறியுள்ள இந்தியத் தமிழர்களின் நலன்களைப் பாதுகாப்பதில இலங்கைப் பிரதமர் கொத்தலாவலையும், இந்தியப் பிரதமர் பண்டித நேருவும் ஒரே நோக்கம் கொண்டிருப்பவர்களாகத்தான் இருக்கிறார்கள் என்பதை தான் இந்த ஒப்பந்தப் பிரிவுகள் நமக்கு அறிவிக்கின்றன. இருநாட்டுப் பிரதமர் மீதும் இலங்கை இந்தியத் தமிழர்கள் இனியும் நம்பிக்கை வைத்திருப்பார்கள் என்று நம்மால நம்ப முடியவில்லை. திராவிடநாடு எவ்வளவு விரைவில உருவாகிறதோ, அதைப் பொறுத்துத்தான் அங்குள்ள தமிழர் பிரச்னை தீருவதும் இருக்கிறது என்பதே நமது திடமான நம்பிக்கை.

அதுவரை இலங்கையில் உள்ள இந்தியத் தமிழர் நிலை இருதலை கொள்ளி எறும்பு போலத்தான் துன்பம் மலிந்ததாக இருக்கும் என்பதில் ஆச்சரியமில்லை.

---

## ஆஸ்திகர் நன்கொடை!

நாமக்கல் வட்டத்தைச் சேர்ந்த நாமகிரி கோயில் தர்மகர்த்தா தோழர் எம். முத்துசாமி (ரெட்டியார்) பி. ஏ., பி. எல்., அவர்கள், தூத்துக்குடி வழக்கு நிதிக்காக ரூ 5—5—0 கொடுத்ததுடன், இனி தி. மு. கழகம் நடத்தும் எந்தவிதமான போராட்டத்திலும், தான் அனுதாபத்துடன் பங்கெடுத்துக் கொள்வதாக வாக்களித்தார்.

---

## முத்தியாலுப்பேட்டை தி. மு. கழகம்

### 3-ம் ஆண்டு விழாவும், பொங்கல் விழாவும்

சென்னை, ஜன. 20—

13—1—54 மாலை 6 மணிக்கு லிங்கி செட்டித் தெரு, மல்லீஸ்வரர் கோவில் முன் தோழர் ம. க. சம்பந்தம் தலைமையில் விழா கொண்டாடப்பட்டது. தலைவர் முன்னுரைக்குப்பின் தோழர்கள் வி. என். கோவிந்தராசன், மூவை-பாண்டியன், காஞ்சி-கல்யாணசுந்தரம் ஆகியோர் இன்றைய அரசியல் நிலைமைகளையும், சென்னை சர்க்கார் போக்கினையும் விளக்கிப் பேசினர்.

பின்பு தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், என். வி. நடராசன் இருவருக்கும் கழக சார்பில், காஞ்சி-மணிமொழியார் அவர்களால் வரவேற்பு இதழ் வாசித்தளிக்கப்பட்டது. வரவேற்புரைகளுக்கு நன்றி தெரிவித்து, பொங்கல் விழாவைப் பற்றி விளக்கி இருவரும் சொற்பொழிவாற்றியபின் நன்றியுரையுடன் இரவு 9-30 மணிக்கு கூட்டம் முடிவுற்றது.

தூத்துக்குடி வழக்கு நிதிக்கு முத்தியாலுப்பேட்டை தி. மு. கழக சார்பில் இரண்டாந் தடவையாக கூட்ட உண்டி வசூல் ரூ 8—0—6-ம், கழகத் தொகை ரூ 10 ஆக ரூ 18—0—6 அளிக்கப்பட்டது. (ந. நி)

---

## சேத்துப்பட்டில் பொதுக்கூட்டம்

சென்னை, டிச. 20—

12—1—54-ல், வ. உ. சி. இளைஞர் கழக சார்பில், ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு தோழர் கி. மனோகரன் தலைமை வகித்தார். பொதுச் செயலாளர் அண்ணாதுரை, நெடுஞ்செழியன், அ. பொன்னம்பலனார் ஆகியோர் பேசினர். தூத்துக்குடி நிதிக்கு உண்டியல் மூலம் ரூ: 18—5—0 வசூலாயிற்று.

---

## கரூரில் பேச்சுப் போட்டி

16—1—54 காலை 8-30க்கு கரூர் டாக்கிடாக் தியேட்டரில் திராவிட கழக சார்பில் பேச்சுப் போட்டி நடைபெற்றது. போட்டியில் கலந்து கொண்ட தோட்டக்குறிச்சி தி. மு. கழகச் செயலாளர் தோழர் டி. ஆர். முத்துசாமிக்கு. அன்று மாலை நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் முன்னிலையில், தோழியர் மணியம்மையார் அவர்களால் ½ பவுன் தங்க மோதிரம் பரிசளிக்கப்பட்டது.

# நூலைப் போல் சேலை-தாயைப் போல் பெண்!

—(:)—

## ஆணையிட்டு வளர்க்கக் கூடியதல்ல ஒழுக்கம்

### மாணவர் மன்ற விழாவில் பி. டி. ராஜன் அறிவிப்பு

சென்னை, ஜன 20—

சென்னை மாணவர் மன்ற 22-ம் ஆண்டு நிறைவு பரிசளிப்பு விழா, 17—1—54-ல் கோகலே மண்டபத்தில் நடைபெற்ற போது, அதன் ஆதரவில் ஓவிய சித்திரக் கலைக் காட்சியும், கையெழுத்துப் பிரதிகள் காட்சியும் நிறுவப்பட்டிருந்தது. அக்கலைக் காட்சியைத் திறந்து வைத்து, தோழர் பி டி. இராஜன் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"முன் கால மாணவர்களுக்கும், இக்கால மாணவர்களுக்கும் அதிக வேற்றுமை உண்டு. அக்கால மாணவர்கள் மிக கட்டுப்பாடு உடையவர்களாய் இருந்தனர்.

"கட்டுப்பாடும், ஒழுக்கமும் சட்டத்தாலோ, போலிசாலோ, இராணுவத்தாலோ, பயப்படுத்தி ஏற்படுத்துவதல்ல. எந்த சமூகமும் முன்னேற பதேச்சையான, இயற்கையான கட்டுப்பாட்டை கைக்கொள்வதும், அதை வளர்ப்பதும் மிக மிக இன்றியமையாதது. பெற்றோர்கள் தம் குழந்தைகளை அம்முறையிலேதான் வளர்க்கப் பாடுபட வேண்டும். அவர்களிடம் அன்பு மிளிர வேண்டும். குழந்தைகள் அன்புக்குப் பாத்திரமாகி, அவ்வாறே பணிந்து நடக்கவும் கற்றுக் கொள்ளப் பயில்வார்கள்.

"குழந்தைகள் மனோ நிலைக்கேற்ப பயிற்சியும் அளிக்கப்பட வேண்டும். சில குழந்தைகள் சித்திரத்தில், சிலருக்கு காவியத்தில், சிலருக்கு படிப்பில், சிலருக்கு தேகாப்பியாசத்தில் இப்படி மாறுபட்ட மனோ நிலை உள்ளவர்களாகவே இருப்பார்கள். அவர்கள் போக்கை அறிந்து, அதே துறையில் அவர்கள் தேர்ச்சியடைய உதவ வேண்டும். அப்போதுதான் அவர்கள் வாழ்க்கை வெற்றியடையும். அவர்கள் வாழ்க்கை வெற்றியடைய நீங்களும் உதவி செய்தவராவீர்கள்.

"மானம், வீரம், தீரம், பரோபகாரம், தயை, ஈகை இவற்றிலெல்லாம் சிறந்து, வழிகாட்டியாய் விளங்கிய தமிழர் சமூகம் வயிற்றுச் சோற்றுக்காக மானத்தையும் இழக்கத் தயாராகயிருக்கும் இன்றைய நிலையைப் பார்க்க மனம் வெதும்புகிறது. இதைப் பார்க்கும் துர்ப்பாக்கிய நிலைமையிலிருப்பதை எண்ணி மிகமிக வருந்துகிறேன்.

"பழைய நிலையை நாம் அடைய, மாணவர்கள் வாழ்க்கையை சீர்திருத்திக் கொள்ள வேண்டுகிறேன். இதுவே நான் பல நாளாக விரும்புவது. மாணவர்கள் மிகுதியாய் உள்ள இக் கூட்டத்தில் அதை வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

"அதிகமாகப் படியுங்கள்; நிறையப் பேசக் கேளுங்கள்; ஆனால் குறைவாகவே பேசுங்கள் என்றும் அறிவுறுத்த விரும்புகிறேன். மாணவர்கள் அடங்கிய இந்தக் கூட்டத்தில் கட்சிக் கொள்கை பற்றி நான் ஏதும் சொல்ல விரும்பவில்லை. நீதிக் கட்சி அங்கத்தினன் என்ற முறையில், நாங்கள் உத்தியோகம் வகித்த காலத்தில்; எல்லோருக்கும் சம நீதி வழங்கினோம். எவ்வித பாரபட்சமுமில்லாமல ஒரு சாராருக்கே நீதி வழங்கியதாக சிலர் அபாண்டம் சொல்வதை நம்பாதீர்கள். மிக பயந்து, நிராசு முறையில் நிறுத்தி சம நீதி வழங்க சதா பாடுபட்டோம் என்று விளக்க விரும்புகிறேன்."

---

### இடைவிடாமல் சைகிள் சவாரி

வேலூர் (சேலம்) வட்ட உ. சி. தி-வில், பஞ்சாயத்து போர்டு தலைவர் கருப்பண்ணன் தலைமையில், தோழர் அப்துல் கரீம் அவர்கள், 9—1—54 காலை 6-30 மணி முதல் 11—1—54 மாலை 5-30 மணி முடிய (59 மணி நேரம்) இரவும் பகலும் இடைவிடாமல் சைக்கிளிலேயே சவாரி செய்து முடித்தார். தோழர் அப்துல் கரீமைப் பாராட்டி பல தோழர்களால் ரூபாய்களும், தங்கம், வெள்ளியில் பதக்கமும், பொங்கல் வாழ்த்துகளும், தோழர் மு. மாணிக்கம் அவர்களால் ஒரு வாழ்த்து மடலும் வாசித்தளிக்கப்பட்டன.

---

### விருதுநகர் தி. மு. கழகம்

17—1—54 காலை 10-30 மணிக்கு நாடார் பரிபாலன சங்கத்தில் பொது உறுப்பினர் கூட்டம் தோழர் இரா. செகதீசன் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் தோழர்கள் என். இரத்தினம், கா. ச. இர. பாஸ்கரன் முறையே செயலாளர், துணைச் செயலாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

---

## சேலம் மாவட்டத் தோழர்களுக்கு

அத்துக்குடி சதி வழக்கு நிதிக்குக் குறிப்பிட்ட தொகைகளைச் சேர்த்துக் கொடுப்பதாக ஒத்துக்கொண்ட வட்டக்குழுக்களும், நகர, சிற்றூர் கிளைகளும் நாளதுவரை அவைகளின் தொகைகளை மாவட்டத்திடம் சேர்ப்பிக்கவில்லை. இது மிக வருந்தத்தக்கதாகும். மாவட்டத்திடம் குறித்த தொகை வரப்பெற்றால்தான் தோழர் அண்ணாதுரை அவர்களையும், ஏனைய தலைவர்களையும் நம் மாவட்டத்தின் சார்பாக அத்துக்குடி நிதி அளித்து வரவேற்க முடியும்.

நிதியை நேரில் சென்று சேர்க்கும் பொருட்டு சேலம் மாவட்ட துணைச்செயலாளர் திரு. ப இராமலிங்கம் அவர்களும் மாவட்டப் பொருளாளர் திரு. பி. எம். குப்புசாமி அவர்களும் கீழ்க்கண்ட தேதிகளில், கீழ்க்கண்ட வட்டங்களில் சுற்றுப்பிரயாணம் செய்வார்கள். அந்தந்த வட்டக் குழுக்களும், சிற்றூர் கிளைகளும், அந்தந்தத் தேதிகளில் தொகைகளைச் சேர்த்து வைத்து அவர்களிடம் கொடுத்து விடும்படி கேட்டுக் கொள்கிறேன் என்று துணைச் செயலாளர் அறிவிக்கிறார்.

சுற்றுப்பிரயாண விவரம்:—

ஜன. 23,24: — திருச்செங்கோடு
,, 25: — நாமக்கல்
,, 26: — ராசிபுரம் சேலம்
,, 27: — சேலம், ஆத்தூர்

---

## கோவையில் தோழர் நெடுஞ்செழியன்

### ரூ. 8,000-க்குக் கைத்தறித் துணிகள் விற்பனை

கோவை ஜன. 19—

"தற்பொழுதுள்ள சூழ்நிலையில் கைத்தறியை நம்பி—அதை விட்டால், வேறு தொழில் செய்ய முடியாத, தெரியாத நிலையிலுள்ள லட்சக்கணக்கான நெசவுத் தொழிலாளர்களைக் காப்பாற்றவே தி. மு. கழகம் இத்தகைய விற்பனை வாரத்தை ஏற்பாடு செய்திருக்கிறது; அதனால், விஞ்ஞானத்திற்கு (ஆலைகளுக்கு) நாங்கள் எதிரி என்று யாரும் கருத வேண்டாம். இப்பொழுதுள்ள நெசவுத் தொழிலாளர்கள் விஞ்ஞான சாதனங்களுக்கு அழைத்துச் செல்லப்படும் வரையில அல்லது அவர்களது அந்தந்த பரம்பரை வேறு பல விஞ்ஞானத் தொழில்களில் ஈடுபடும் வரையில், நாமனைவரும் கைத்தறித் துணிகளையே வாங்கி உபயோகித்து, வாடும் அந்த நெசவுத் தொழிலாளர் குடும்பங்களைக் காப்பாற்ற வேண்டும். இத்துறையில கட்சி சார்பற்ற முறையில் யாவரும் கலந்துகொள்ளலாம்" என்று, கோவை டவுன் ஹாலில், கைத்தறித் துணி விற்பனை விழாவைத் துவக்கி வைத்துப் பேசுகையில், தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் குறிப்பிட்டார்.

10—1—54 அன்று காலை 8-30 மணிக்கு கைத்தறித் துணி விற்பனை விழா, தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களால் துவக்கப்பட்டு, 13-ம் தேதி வரை நடைபெற்றது.

தோழர் கே. சிவசாமி அவர்கள் கடையில் விற்பனையைத் துவக்கிவைக்கப்பட்டது.

13-ம் தேதியன்று காலையில் அலங்கரிக்கப்பட்ட வண்டியில் கைத்தறித் துணிகளை ஏற்றி, காலை 10-30 மணிக்கு புறப்பட்டு விற்கச்சென்ற தோழர்கள் மாலை 3-30 மணிக்கு டவுன் ஹால் வந்தடைந்தனர்.

அன்று இரவு வரை கைத்தறித் துணி மொத்த விற்பனை ரூ 8,000—13—6 ஆகும்.

**நாகை**

7—1—54ல், இவ்வூர் தி மு கழகத் தோழர்களால் நகர்வலம் பாங்கில், கைத்தறித் துணி விற்பனை செய்யப்பட்டது. காலை 7 மணி முதல் இரவு 9 மணி வரை தோழர்கள் விற்பனையில் பங்கு எடுத்துக்கொண்டனர். 13—1—54-ல் மட்டும் கைத்தறி துணி விற்பனை செய்த தொகை ரூ. 375 ஆகும்.

**விருதுநகர்**

13—1—54ல், தோழர் என். இரத்தினம் தலைமையில், கழகத் தோழர்கள் நகரெலாம் சென்று ரூ 529-13-9 பெறுமானமுள்ள கைத்தறித் துணிகளை விற்றனர்.

**பழனி**

13—1—54 காலை 9 மணிக்கு நகர தி. மு. கழகக் கட்டடத்திலிருந்து தோழர் கா. வெங்கடாசலம் தலைமையில் புறப்பட்டு முக்கிய வீதிகளில் கைத்தறி துணி மொத்தம் ரூ. 110—8—0க்கு விற்பனை செய்யப்பட்டது. விற்பனையில் தோழர்கள் வெ. தியாகராசன், பெ பெருமாள், நாட்டுவன், சுப்புரும், பரமசிவம், செட்டு, மாணிக்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

**தேனி**

13—1—54 காலை 11 மணி முதல் மாலை 2 மணி வரை கழகத் தோழர்கள், கைத்தறித் துணி விற்பனை செய்த மொத்த தொகை ரூ. 366—1—6.

**திண்டுக்கல்**

12—1—54 மாலை 3 மணி முதல் இரவு 7 மணி வரை, தோழர் எஸ் பி. தாண்டவன் தலைமையில், தோழர்கள் ஏ. சுப்பையா, பாலன, பக்வத்சிங் மற்றும் பிரபக்த தோழர்களால் கைத்தறித் துணி விற்பனை செய்த மொத்த தொகை ரூ 96—5—0.

---

### நன்றி

'திராவிடர் திருநாள்' வாழ்த்துக்கள் அனுப்பிய தோழர்கள் அனைவருக்கும் எங்களது இதயங்கனிந்த நன்றி உரித்தாகுக.

—'நம் நாடு' அலுவலகத்தார்.

---

# நாவலர் சோமசுந்தர பாரதியார் வாழ்க்கை வரலாறு

பேராசிரியர் திரு பாரதியார் அவர்கள் எட்டையபுரத்தில் பிறந்து, கவி சுப்ரமணிய பாரதியின் தோழராய், இளமையிலேயே, ஆட்சி மொழியாகிய ஆங்கிலத்தோடு, தாய் மொழியாகிய தமிழையும் ஆர்வமுடன் கற்றவராவார்—பிறகு, சென்னைக் கிறித்தவ கல்லூரியில் படித்து, அப்போது பெறுதற்கரிய எம். ஏ. பட்டம் பெற்று, சட்டக் கலையில் தேறி, அத்துக்குடியில் பல ஆண்டுகள் சிறிய வழக்கறிஞராய்த் தொண்டு செய்தார். அவர் ஆற்றலுக்குத் அத்துக்குடி சிறிதாகக் காணப்பட்டதால், மதுரை வந்து தம் பணியைப் புகழ்பெற நடத்தினார். இயற்கையில் அவர்பால் அமைந்த நுண்ணறிவும், நூற்புலமையும், சொல்வன்மையும், சட்டங்களை அலசித் தெளிவாகப் பொருள் கண்டு, வகுத்தும்—தொகுத்தும் வாதம் புரிதற்கு உதவியாய் இருந்தன; ஆதலால், சட்டத் தொழிலில் சிறந்து விளங்கினார்.

பாரதியார் அவர்கள் வழக்கறிஞராய்ப் பணி செய்துகொண்டே தமிழ்ப்பெரு நூல்களான தொல்காப்பியம், சங்க நூல்கள், திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை, கம்பராமாயணம் முதலியவற்றை நுணுக்கமாக ஆராய்ந்து புதிய புதிய உண்மைகளைக் கண்டு எழுதியும், சொற்பொழிவு செய்தும், தமிழ்ப்பணி புரிந்தது பெரிதும் பாராட்டதற்குரியதாகும்.

ஆங்கிலம் பயின்று சிறப்பெய்தியவர்களில், தமிழிலும் ஒத்த புலமையும், எழுத்துச் சொல் வன்மையும் உடையவர்களைக் காண்பது அரிது. ஆனால்,பாரதியார், இரு மொழியிலும் சிறந்த புலமை உடையவராவர் அவருடைய அரிய ஆராய்ச்சிகள் பல, மதுரைத் தமிழ் சங்கத்தின் வெளியீடான செந்தமிழிலும், பல்கலைக் கழக வெளியீடுகளிலும் வெளி வந்திருக்கின்றன.

வழக்கறிஞராய் மிக்க ஊதியம் பெற்று வளமான வாழ்க்கை நடத்திய நம் பாரதியார், தமிழ் மொழியின்பால் உள்ள பெருங் காதலால், தன் தொழிலைவிட்டு, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியர் பதவியை ஏற்று, பல ஆண்டுகள் தமிழ்ப் பணி புரிந்தார் அவர்பால் தமிழ் பயின்ற அறிஞர் பலர், இக்காலத்தில், கல்லூரியில் இருக்கின்றனர்.

பாரதியாருடைய ஆராய்ச்சிகளில், திருவள்ளுவர், மதுரையில் குறுநில மன்னர குடியில் பிறந்து, பாண்டிய மன்னனுக்கு உட்படு கருமத் தலைவராகயிருந்தார் என்று கண்டது சிறந்ததோர் உண்மையாகும்.

தொல்காப்பிய பொருள் அதிகார ஆராய்ச்சியில் ஈடுபட்டு, தமிழர்களின் களவு, கற்பு, காதல் முறைகளை நன்கு அறியாது சிலர் மிகத் தவறாக எழுதியதை வன்மையாகக் கண்டித்து, உண்மைக் கொள்கைகளை நிலைநிறுத்தி, தமிழ் நாட்டுப் பெண்குலத்திற்கு வந்த இழுக்கை மாசற நீக்கிய பெருமை பாரதியார் அவர்கட்கு உரியதாகும்.

தொல்காப்பியப் பொருள் அதிகாரத்தில் காணப்படும் தமிழர் பண்பாடுகளை செவ்வையாக ஆராய்ந்து, அவற்றிற்கு மாறாக உள்ள நச்சினார்க்கினியர் உரைகளை மறுத்து, தருக்க முறையில் திரு. பாரதியார் அவர்கள் புதிய உரை எழுதியிருக்கிறார்கள். இதுவரையில் வாழ்ந்த பெரும் புலவர்கள் எவரும் இதை மறுத்து ஒரு சொல்லும் சொன்னது கிடையாது என்றால் அவருடைய ஆராய்ச்சி உரை எவ்வளவு திட்பமானது என்பது சொல்லாமலே விளங்கும்.

பாரதியார், நூல்களை நுணுகி ஆராய்ந்து, தான் கண்டதைத் துணிந்து சொல்லும் அஞ்சா நெஞ்சம் படைத்தவர்.

பாரதியார் அவர்கள் சொற்பொழிவு செய்வதிலும், கட்டுரை எழுதுவதிலும் சிறந்து இருப்பது போல், பாட்டுகள் இயற்றுவதிலும் மிக்க வன்மையுடையவராவர். அவர் பாடிய, 'மாரிவாயில்' 'மங்கலக் குறிச்சியில்', 'பொங்கல் நிகழ்ச்சி' முதலிய நூல்களே, அதற்குச் சான்றாகும். இந்த நூல்களைச் சிறந்த புலவர்களான டாக்டர் சாமிநாத ஐயர், பண்டிதமணி கதிரேசன் செட்டியார், மகா வித்வான் இராகவய்யங்கார் முதலியோர் பாராட்டியிருக்கிறார்கள்.

பாரதியார் அவர்கள் இளம் பிராயத்திலேயே அரசியலில் ஈடுபட்டு, கவி. சுப்ரமணிய பாரதி, கப்பல் ஓட்டிய சிதம்பரம்பிள்ளை முதலியவர்களோடு சேர்ந்து, நாட்டுக்குப் பெரும் பணி புரிந்தவர்.

இந்தி எதிர்ப்புப் போரில் முன்னணியில் நின்று பெரும் போர் செய்து, வெற்றி கண்ட பெருமையும் பாரதியாரைச் சாரும்.

இவ்வாறு நம் நாட்டுக்கும், மொழிக்கும், கலைக்கும், பண்பாட்டிற்கும் அரும்பெரும் பணி செய்து அழியாப் புகழை எய்திய நம் பாரதியார் அவர்கட்கு, நம் கடமையைச் செய்தோம் எனது நாம் பெருமையும் மகிழ்ச்சியும் கொள்வோம்."

---

## தென்கிழக்கு ஆசிய நாடுகள்

### கொழும்பு மாநாட்டின் முக்கிய பிரச்சினை

கல்கத்தா, ஜன. 19—

தென்கிழக்கு ஆசிய நாடுகளை ஒரு முன்னேற்ற தொகுதி அல்லது மண்டலமாக இணைப்பது தான் கொழும்பில் நடக்கவிருக்கும் பிரதம மந்திரிகளின் மாநாட்டில் முக்கியமாக பரிசீலனைக்கு வரும் விஷயமாக இருக்கு மெனச் சொல்லப்படுகிறது. நேருவும், கொத்தலாவலையும் இதற்கு இணக்கம் தெரிவித்து விட்டார்களாம்.

இதில் சேரும் நாடுகள், வல்லரசுகள் தொகுதிகள் எதிலும் சேரமாட்டாது. எதனிடமிருந்தும், இராணுவ உதவியை ஏற்றுக் கொள்ளவுமாட்டாதெனவும் வற்புறுத்தப்படும்.

